# செயலாற்றுகை அறிக்கை - 2019

அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
நிதி,பொருளாதாரம் மற்றும் கொள்கை
அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு - 01

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


**அத்தியாயம் 01: பணிச் சட்டகம்**

1.1 அறிமுகம் 3
1.2 தொலை நோக்கு மற்றம் பணிக்கூற்று 3
1.3 பொறப்புகள 4
1.4 நிறுவன அமைப்பு 4

**அத்தியாயம் 02: முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

2.1 அரசிறை செயல்திறன்

2.1.1 வரி வருமானம் 6
2.1.2 வரியல்லா வருமானம் 14
2.1.3 பிரதான அரசிறை நடவடிக்கைகள் 15

**அத்தியாயம் 03: வருடத்திற்கான மொத்த நிதி செயலாற்றுகை – 31 டிசம்பர் 2019**

3.1 நிதி செயலாற்றுகையின் கூற்று 30
3.2 நிதி நிலமை பற்றிய கூற்று 32
3.3 நிதி பாய்ச்சல் பற்றிய கூற்று 33
3.4 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 35
3.5 வருமான சேகரிப்பின் செயல்திறன் 35
3.6 ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயல் திறன் 36
3.7 நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்தின் செலவினத்திற்கான ஒதுக்கீடு 36
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை 36
3.9 கணக்காளர் நாயகத்தின் அறிக்கை 37

**அத்தியாயம் *04:* செயலாற்றுகைச் சுட்டிகள்**

4.10 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 37

**அத்தியாயம் *05:* பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை**

5.10 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குளை சுட்டிக் காட்டுக 38
5.20 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்க 38

**அத்தியாயம் 06: மனித வள விபரம்**

6.1 பதவியணி முகாமைத்துவம் 38
6.2 உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு 38

6.2.1 உள்நாட்டு பயிற்சிகள் 39
6.2.2 வெளிநாட்டு பயிற்சிகள் 40

**அத்தியாயம் *07:* இணக்கப்பாட்டு அறிக்கை** **41**

**அத்தியாயம் *01-* பணிச்சட்டகம்**

## 1.1 அறிமுகம்

நாடு எதிர்பார்க்கின்ற சமூக மற்றும் பொருளாதார குறிக்கோள்களை அடையும் வகையில் அரச, தனியார் மற்றும் சர்வதேச முகவர் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து பரந்தளவிலான அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைச்சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையினை உருவாக்குவதும் மற்றும் அதனைச் செயற்படுத்துவதும் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களாகும்.

நாட்டின் அரசிறைக் கொள்கையில் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளை அடைவதற்குத் தேவையான மிகச் சரியான சீர்செய்கைகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில், வருமானம், செலவினம் நிதியளிப்புச் செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள் என்பவற்றை பகுப்பாய்வுசெய்தல் அதேபோன்று, நாட்டின் வரி விதிப்புக் கொள்கைகளை உருவாக்கல் என்பன இத்திணைக்களத்தின் முக்கிய பொறுப்பாகும்.

அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அரசிறை மூலோபாயக் கூற்று, வரவுசெலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை, அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை, இறுதி வரவுசெலவுத் திட்ட நிலைமை அறிக்கை மற்றும் தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத் திட்ட நிலைமை அறிக்கை என்பன உள்ளடங்கலாக மேற்குறித்த அறிக்கைகளை வெளியிடுவதும் இத்திணைக்களத்தின் முக்கிய பணியாகும்.

## 1.2 தொலை நோக்கு மற்றும் பணிக்கூற்று

### தொலை நோக்கு

“நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று நிறுவப்படுவதை உறுதி செய்தல்”

### பணிக்கூற்று

அரசின் பரந்த அபிவிருத்திச் செயற்பாட்டு சட்டத்தினுள் அரசிறைக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்.

## 1.3 பொறுப்புக்கள்

- அரச, தனியார் மற்றும் சர்வதேச முகவர்களை ஒருங்கிணைத்து நடுத்தர கால அரசிறை மூலோபாயம் மற்றும் அரசிறைக் கொள்கை என்பனவற்றினை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்.
- சுங்கத்தீர்வை மற்றும் விசேட வியாபாரப் பண்ட அறவீடுகள் என்பன நீங்கலாக வரிக்கொள்கைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய சட்டங்களை வகுத்தமைத்தல்.
- அரசாங்க வருமானத்தினைத் திரட்டும் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து திணைக்களங்களோடும் முறையாக ஒருங்கிணைப்பினைப் பேணி அரசிறை வருமானம் மற்றும் அரசிறை செயலாற்றுகை என்பனவற்றை முகாமை மற்றும் மீளாய்வு செய்தல்.
- காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானத்திற்கமைய சட்ட திருத்தங்களோடு சம்பந்தப்பட்ட பணிகளை கையாளுதல்.
- அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் உள்ளடங்கலாக அனைத்து தேவைப்பாடுகளையும் செயற்படுத்துதல்.
- அரசிறை மற்றும் பேரண்டப் பொருளாதாரம் தொடர்பிலான பல்வேறுபட்ட ஆய்வுகளையும் பகுப்பாய்வுகளையும் மேற்கொள்ளல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



**அத்தியாயம் *02* – முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்**

**2.1 அரசிறை செலாற்றுகை**

வரி விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் வரி அடிப்படைகளின் விரிவுபடுத்தலின் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு ரீதியான வருமான திரட்டல் முயற்சிகளின் மத்தியில் வரி மற்றும் வரி அல்லாத வருமான திரட்டில் பிரிவு ரீதியாக தாக்கங்களைக் கொண்டுள்ள பின்னடைவான பொருளாதார செயற்பாடுகளின் காரணமாக மொத்த அரசாங்க வருமானமானது, 2017 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.7 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 12.6 சதவீதமாக 2019 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மூன்றாவது முறையாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. வருமான வரிகள் நீங்கலாக பின்னடைவான வருமான திரட்டினை பிரதிபலிக்கும் வகையில் பெயரளவு நியதிகளில், மொத்த வருமானம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,831.5 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,890.9 பில்லியனாக ரூபா 59 பில்லியனால் அல்லது 3.2 சதவீதம் சற்றுக் குறைந்தளவில் அதிகரித்துள்ளது. பிரதானமாக உள்நாட்டு மற்றும் இறக்குமதி சார்ந்த வரிகளினதும் வரியல்லாத வருமான திரட்டினதும் வீழ்ச்சி காரணமாக மொத்த வருமானம், 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,920.0 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 1890.9 பில்லியனாக 1.5 சதவீதத்தினால் குறைந்துள்ளது. மொத்த வரி வருமானம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,712.3 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,734.9 பில்லியனாக 1.3 சதவீதத்தினால் ஓரளவு அதிகரித்துள்ளமை, பிற உள்நாட்டு மற்றும் இறக்குமதி அப்படையிலான வரிகளாகிய உற்பத்தி தீர்வை, பெறுமதிசேர் வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு, செஸ் மற்றும் விசேட வியாபார பண்ட அறவீடு ஆகியவற்றின் குறைவான செயலாற்றுகை மத்தியிலும் வருமான வரி வருமானம் அதிகரித்துள்ளமையை பிரதிபலிப்பதாக உள்ளது. கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் வருமான வீழ்ச்சி மற்றும் மத்திய வங்கியின் இலாப மாற்றல்களின் பதிவின்மை காரணமாக 2019 ஆம் ஆண்டில் வரியல்லாத வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீத நியதிகளிலும் பெயரளவு நியதிகளிலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது: வரியல்லாத வருமானம் 2018 ஆம் ஆண்டில் 1.4 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 1.0 சதவீதமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.4 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது. பெயரளவு நியதிகளில், வரியல்லாத வருமானங்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 207.7 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 156.0 பில்லியனாக 24.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக, மெய் மொத்த வருமானமானது எதிர்நோக்கப்பட்ட வருமான மதிப்பீடாகிய ரூபா 2,344.0 பில்லியனில் 80.7 சதவீதமாக அமைந்தது. வரியல்லாத வருமானத்தின் சேகரிப்பானது 2019 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 58.4 சதவீதமாகும்.

## அரசாங்க வருமானத்தின் சாராம்சம்

**அட்டவணை 3.1 : அரசாங்க அரசிறைச் செயற்பாடுகளின் சுருக்கம்**

*ரூபா.மில்லியன்*

| விடயம் | 2016 | 2017 | 2018 | 2019 (தற்காலிகமானது) |
|---|---|---|---|---|
| **மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்** | **1,693,557** | **1,839,562** | **1,932,459** | **1,898,808** |
| **மொத்த வருமானம்** | **1,686,061** | **1,831,531** | **1,919,974** | **1,890,899** |
| வரி வருமானம் | 1,463,689 | 1,670,178 | 1,712,318 | 1,734,925 |
| வருமான வரி | 258,857 | 274,562 | 310,449 | 427,700 |
| பொருட்கள் சேவைகள் வரிகள் | 841,967 | 1,025,799 | 1,061,751 | 975,557 |
| வெளிநாட்டு வர்த்தக வரிகள் | 362,865 | 369,817 | 340,117 | 331,668 |
| வரியல்லாத வருமானங்கள் | 222,372 | 161,353 | 207,656 | 155,974 |
| **மானியங்கள்** | **7,496** | **8,031** | **12,485** | **7,909** |
| மொ.உ.உ. மூ | | | | |
| **வருமானம் மற்றும் மானயங்கள்** | **14.1** | **13.8** | **13.5** | **12.6** |
| **மொத்த வருமானம்** | **14.1** | **13.7** | **13.4** | **12.6** |
| வரி வருமானம் | 12.2 | 12.5 | 11.9 | 11.6 |
| வரியல்லாத வருமானங்கள் | 1.9 | 1.2 | 1.4 | 1.0 |
| **மானியங்கள்** | **0.1** | **0.1** | **0.1** | **0.1** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### 2.1.1 வரி வருமானம்

நேரடியான மற்றும் நேரடியல்லாத வரிகளை உள்ளடக்கிய வரி வருமானமானது, 2018 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதாசாரமாக 11.9 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 11.6 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், வரி வருமானமானது, பெயரளவு நியதிகளில், முன்னைய ஆண்டில் பதிவாக்கிய 1,712.3 பில்லியனில் இருந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா 1,734.9 பில்லியன் வரை 1.3 சதவீதத்தினால் சற்று அதிகரித்துள்ளது. இது வருடாந்த மதிப்பீடாகிய ரூபா 2,077.0 பில்லியனில் இருந்து 16.5 சதவீத அல்லது ரூபா 342.1 பில்லியன் விலகலாகும். மதுபானங்கள் மீதான மதுவரி மற்றும் சுங்க இறக்குமதி தீர்வை ஆகியவை சற்று அதிகரித்திருந்தாலும் பெறுமதி சேர் வரி, தேச கட்டுமான வரி, மோட்டார் வாகனங்கள், பெற்றோலிய உற்பத்திகள், மற்றும் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரி, விசேட வர்த்தகப் பண்ட அறவீடு, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு, செஸ் அறவீடு மற்றும் தொலைதொடர்பு அறவீடு ஆகியவற்றின் வருமான வீழ்ச்சி ஆகியவை இவ் விலகலுக்குப் பொறுப்பானதாக அமைந்தது. அரசாங்க வரி வருமானத்தில் நேரடியற்ற வரிகளின் வருமானம் 75.3 சதவீதமாகக் காணப்பட்டது: 2019 ஆம் ஆண்டில் அரசாங்க வரி வருமானத்தில் நேரடியற்ற வரிகளின் மூலமான வருமானம் 75.3 சதவீதமாகும்: 2019 ஆம் ஆண்டில் நேரடியற்ற வரி வருமானங்களுக்கான பொருட்கள் சேவைகள் வரி மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகளின் பங்களிப்பு முறையே 74.6 சதவீதமும் 25.4 சதவீதமும் ஆகும்.

**வரி வருமானத்தின் பிரிவுகள்**

வரைபு 3.2 : வருமான வரி வகுதி - 2019




புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அமுல்படுத்தியமையை பிரதிபலிக்கும் வகையில், நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமான வரிகள், உழைக்கும் போது செலுத்தும் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் வட்டி வருமானம் மீதான பிடித்து வைத்தல் வரி ஆகியவை மூலமான வருமான அதிகரிப்புடன் மொத்த வரி வருமானத்தில் நேரடி வரிகளின் வருமானம் 24.7 சதவீத பங்களிப்பினை வழங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நியதிகளிலும் பெயரளவு நியதிகளிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நேரடி வரி வருமானத்தின் சதவீதமாக 2018 ஆம் ஆண்டின் 2.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 2.8 சதவீதமாக 0.6 சதவீத புள்ளிகளினால் அதிகரித்துள்ளது. அது பெயரளவு நியதிகளில், 2018 ஆம் ஆண்டின் ரூபா 310.4 பில்லியனில் இருந்து ரூபா 427.7 பில்லியனாக 37.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

**வருமான வரிகள்**

வருமான வரிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம், உழைக்கும் போது செலுத்தும் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் வட்டி வருமானம், பிடித்துவைத்தல் வரி ஆகியவை உள்ளடங்கலாக தாபன மற்றும் தாபனமல்லாத வரி போன்ற அனைத்து வகையான வருமான வரிகளினதும் அதிகரிப்பு காரணமாக உயர்வடைந்துள்ளது. நேரடி வரிகளிலிருந்து வருமான திரட்டலை மேம்படுத்தும் வகையில் மொத்த வரி வருமானத்திற்கான வருமான வரி வருமானத்தின் பங்கு 2018 ஆம் ஆண்டின் 18.1 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 24.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

**வருமான வரியின் செயலாற்றுகை**

ரூபா.மில்

| விடயம் | 2017 | 2018 | 2019 | வளர்ச்சி % |
|---|---|---|---|---|
| **மொத்த வருமான வரி** | **274,562** | **310,450** | **427,700** | **37.8** |
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத | 143,588 | 169,672 | 272,603 | 60.7 |
| உ.போ.செ.வரி | 32,920 | 41,385 | 49,445 | 19.5 |
| பொ.சே.கட்டணம் | 44,720 | 52,979 | 55,301 | 4.4 |
| வட்டி மீதான வரி | 53,334 | 46,414 | 50,351 | 8.5 |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

தாபன மற்றும் தாபனமல்லாத வருமான வரிகளின் வருமானம் ரூபா 169.6 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 272.6 பில்லியன் வரை 60.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு உயர்ந்துள்ளது. மொத்த வருமான வரிக்கான தாபன வருமான வரியின் பங்கு 95.8 சதவீதமாக அதிகரித்துள்ளமை 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றடுக்கு தாபன வரிக் கட்டமைப்பின் வரி அடிப்படையின் விரிவாக்கலையும் முன்னேற்றப்பட்ட வரி நிருவாகத்தினை, குறிப்பாக, வரி வருவாய்கள் மற்றும் கொடுப்பனவுகளையும் பிரதிபலிப்பதாக உள்ளது. தாபனமல்லாத வரிகளின் நியதிகளில், உழைக்கும் போது செலுத்தும் வரி வருமானமானது, வருமான நிருவாக தகவல் முறைமை (RAMIS) காரணமாக மேம்படுத்தப்பட்ட இணக்கத்தின் பயனால் 2018 ஆம் ஆண்டின் ரூபா 41.4 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 49.4 பில்லியன் 19.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. வருமான அடிப்படையிலான பொருளாதார சேவைக் கட்டண திரட்டல் காரணமாக பொருளாதார சேவைக் கட்டணம் மூலம் பெற்றுக்கொண்ட வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 53.0 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 55.3 பில்லியன் வரை 4.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேசமயம், வட்டி வருமானம் மீதான பிடித்துவைத்தல் வரி வருமானம் முன்னைய ஆண்டின் ரூபா 46.4 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 50.3 பில்லியன் வரை 8.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

**பெறுமதி சேர் வரி**

உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளின் பின்னடைவும் இறக்குமதி சார்ந்த செயற்பாடுகளின் பற்றாக்குறையும் பெறுமதி சேர் வரியின் மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, மொத்த வரி வருமானத்தில் பெறுமதி சேர் வரி வருமானத்தின் பங்கு 2018 ஆம் ஆண்டின் 27.0 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 25.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெறுமதி சேர் வரியிலான வருமானம் 2018 ஆம் ஆண்டின் 3.2 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 3.0 சதவீதமாக குறைவடைந்தது. பெயரளவு நியதிகளில், அது 2018 ஆம் ஆண்டின் ரூபா 461.6 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 443.9 பில்லியன் வரை 3.9 சதவீதத்தினால் சற்று வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 282.5 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 274.0 பில்லியன் வரை 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றுள்ளது. பெறுமதி சேர் வரி வருமானத்திற்கான பெரும் பங்களிப்பாகிய நிதிச் சேவைகளில் மூலமான வருமானம் 2019 ஆம் ஆண்டில், ரூபா 49.8 பில்லியன் வரை 10.8 சதவீதத்தினாலும் பிற சேவைகளின் மூலம் ரூபா 138.9 பில்லியன் வரை 5.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தி துறை ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 6.4

சதவீதத்தினால் ரூபா 85.2 பில்லியன் வரை அதிகரித்தது. அதே சமயம், இறக்குமதி சார்ந்த செயற்பாடுகள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானமும் 2018 ஆம் ஆண்டின் ரூபா 179.2 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 170.0 பில்லியன் வரை 5.2 சதவீதத்தினால் சரிவடைந்துள்ளது. மந்தமான இறக்குமதி சார்ந்த செயற்பாடுகளின் மத்தியிலும் நிலக்கரி, பால் மா, சீமெந்து, இரும்புக் கட்டைகள் மற்றும் சீமெந்து கிளிங்கர் போன்றவை, இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானத்திற்கு பிரதானமான பங்களிப்பினை வழங்கியுள்ளன. பெறுமதி சேர் வரி விகிதம் 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதத்திற்கு குறைவடைந்தது மட்டுமன்றி பெறுமதி சேர் வரியின் பதிவிற்கான ஆரம்ப எல்லை 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அதிகரிக்கப்பட்டமை கிட்டிய காலத்தில் வருமானம் மீது தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளது. எவ்வாறாயினும், மேம்படுத்தப்பட்ட பொருளாதார செயற்பாடுகளினாலும் மொத்தக் கேள்வியினாலும் பெறுமதிசேர் வரி வருமானம் நடுத்தர காலத்தில் உயர்வடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பெறுமதி சேர் வரி வருமானம்

ரூபா.மில்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு | 140,413 | 131,662 | 168,817 | 276,065 | 283,327 | 275,089 |
| இறக்குமதிகள் | 136,221 | 89,174 | 115,339 | 168,394 | 179,163 | 169,914 |
| **மொத்த வருமானம்** | **276,634** | **220,836** | **284,156** | **444,459** | **462,490** | **445,003** |
| மீள் கொடுப்பனவுகள் | 1,284 | 1,136 | 686 | 720 | 840 | 1,126 |
| **தேறிய வருமானம்** | **275,350** | **219,700** | **283,470** | **443,739** | **461,651** | **443,877** |
| **மொ.உ.உ % இல் தேறிய வருமானம்** | **2.7** | **2.0** | **2.4** | **3.3** | **3.2** | **3.0** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### தேச கட்டுமான வரி

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக தேச கட்டுமான வரியின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் 2019 ஆம் ஆண்டில் மாற்றமடையாது 0.5 சதவீதத்திலேயே காணப்பட்டது. எவ்வாறாயினும் மொத்த வரி வருமானத்தில் தேச கட்டுமான வரியின் பேரிலான வருமானம் 2018 ஆம் ஆண்டின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 4.1 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. பெயரளவு நியதிகளில், தேச கட்டுமான வரியிலிருந்தான மொத்த வரி திரட்டல் 2019 ஆம் ஆண்டில் சற்று வீழ்ச்சியுற்றமைக்கு பின்னடைவான உள்நாட்டு பொருளாதார மற்றும் இறக்குமதி சார்ந்த செயற்பாடுகள் காரணமாக அமைந்துள்ளன. இதற்கமைவாக, தேச கட்டுமான வரியிலிருந்தான வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 71.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 70.7 பில்லியன் வரை 1.0 சதவீதத்தினால் குறைந்துள்ளது. எவ்வாறாயினும், உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 51.2 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 52.4 பில்லியன் வரை 2.4 சதவீதத்தினால் அதிகரித்து, இறக்குமதி தொடர்பான செயற்பாடுகள் ஊடான வருமானம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 20.2 பில்லியனாகக் காணப்பட்டு 2019 ஆம் ஆண்டில் ரூபா 18.2

பில்லியனாக 9.6 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றுள்ளது. சேவைகளிலிருந்தான தேச கட்டுமான வரி வருமானம் முன்னைய ஆண்டின் ரூபா 40.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 39.7 பில்லியனாக 0.6 சதவீதத்தனால் சற்றே வீழ்ச்சியுற்ற அதே சமயம், உற்பத்தி துறை ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தேச கட்டுமான வரி வருமானம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 11.2 பில்லியனாகக் காணப்பட்டு 2019 ஆம் ஆண்டில் ரூபா 12.7 பில்லியனாக 13.5 சதவீதத்தினால் கணிசமானளவு உயர்வடைந்துள்ளது. பால் மா, செல்லிடத் தொலைபேசிகள், இரும்புக் கட்டைகள் மற்றும் சீமெந்து போன்ற இறக்குமதிகள், இறக்குமதி மீதான தேச கட்டுமான வரி வருமானத்திற்கு பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளன.

**உற்பத்தி வரி**

மொத்த வரி வருமானத்தில் பிரதான பங்களிப்பினைக் கொண்டுள்ள உற்பத்தி வரிகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம், மதுபானங்களின் ஊடாக திரட்டப்பட்ட வருமானத்தில் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டிருப்பினும் மோட்டார் வாகனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரிகளின் வருமானக் குறைப்பு காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்திலும் பெயரளவு நியதிகளிலும் கணிசமான வீழ்ச்சியைக் கண்டுள்ளது. உற்பத்தி வரிகள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தி சதவீதத்தில் 2018 ஆம் ஆண்டின் 3.4 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 2.7 சதவீதமாக 0.7 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. பெயரளவு நியதிகளில், மதுவரி மூலமான வருமானமும் 2018 ஆம் ஆண்டின் ரூபா 484.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 399.5 பில்லியனாக 17.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும் உற்பத்தி வரிகள் மூலம் அடையப்பெற்ற வருமானம் 2019 ஆம் ஆண்டில் மொத்த வரி வருமானத்தில் பிரதான பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கி 2019 ஆம் ஆண்டின் மொத்த வரி வருமானத்தில் 23.0 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

**உற்பத்தி வரி வருமானம்**

ரூபா.மில்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| மதுபானம் | 69,100 | 105,234 | 120,238 | 113,684 | 113,944 | 115,443 |
| சிகரெட்/ புகையிலை | 57,204 | 79,981 | 88,752 | 85,956 | 92,198 | 87,367 |
| மோட்டார் வாகனம் | 98,531 | 263,470 | 186,499 | 189,740 | 204,081 | 130,378 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 28,732 | 45,092 | 55,719 | 73,983 | 66,318 | 61,740 |
| ஏனைய | 3,087 | 3,812 | 3,704 | 6,091 | 7,701 | 4,549 |
| **மொத்தம்** | **256,654** | **497,589** | **454,912** | **469,454** | **484,242** | **399,478** |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் பிரேரிக்கப்பட்டவாறு 2000 க.செ. இற்குக் குறைவான இயந்திரக் கொள்ளளவை உடைய மோட்டார் வாகனங்கள் மீதான தீர்வை வரி அதிகரிப்பு மற்றும் மோட்டார் வாகங்கள் மீதான சொகுசு வரி விதிப்பு போன்ற இறக்குமதி கட்டுப்பாட்டு கொள்கைகளின் விளைவாக மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 204.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 130.4 பில்லியன் வரை 36.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது. உற்பத்தி வரி மற்றும் மோட்டார் வாகனங்கள் மீதான

சொகுசுவரி ஆகியவற்றின் திருத்தங்களுக்கு மேலதிகமாக, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சலுகை ரீதியான அனுமதிப்பத்திர திட்டத்தின் கீழ் மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களைத் திறத்தல் 2019 ஏப்பிரல் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி வருமானத்தில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. மேற்கூறிய இடையூறு மொத்த உற்பத்தி வரி வருமானத்தில் மோட்டார் வாகனங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் வருமானத்தின் பங்களிப்பினை 2018 ஆம் ஆண்டில் பதிவாகிய 42.1 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 32.6 சதவீதம் வரை வீழ்ச்சியடைய வழிவகுத்துள்ளது.

மீளாய்வுக்குரிய ஆண்டில் டீசல் இறக்குமதிகளின் வீழ்ச்சி மற்றும் 2018 நவம்பர் மாதத்தில் இருந்து பயன்வலுப்பெறுமாறு ஒட்டோ டீசலின் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றிற்கு ரூபா 13.00 இலிருந்து லீற்றர் ஒன்றிற்கு ரூபா 6.00 வரை உற்பத்தி வரி குறைப்பு போன்றவற்றின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகள் மூலமாக கிடைக்கப் பெற்ற வருமானமும் 2018 ஆம் ஆண்டின் ரூபா 66.3 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 61.7 பில்லியன் வரை 6.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2019 ஆம் ஆண்டில் உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுடன் இணைந்து சிகரெட்டுகள் மீதான வரி பல தடவைகள் உயர்த்தப்பட்டமை ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரி வருமானமும் 2018 ஆம் ஆண்டின் ரூபா 92.2 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 87.4 பில்லியனாக 5.2 சதவீதத்தினால் வீழச்சியுற்றுள்ளது. மேலும், ஏனையவை, பிரதானமாக குடிபானங்கள் மற்றும் பிளாஸ்திரிக் பிசின் வகைகளுக்கான உற்பத்தி வரி வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 7.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 4.5 பில்லியனாக 40.9 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், மதுபானங்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற வருமானமானது, பிரதானமாக அனைத்து வகையான மதுபானங்கள் மீதும் ஏற்புடைய மது வரி 2019 மாச்சு மாதம் முதல் செயல்வலுப் பெறுமாறு உயர்த்தப்பட்டமையால் 2018 ஆம் ஆண்டின் ரூபா 113.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 115.4 பில்லியனாக 1.3 சதவீத்தினால் சற்றே அதிகரித்துள்ளது. இவ் சிறியளவான அதிகரிப்பு, 2019 திசெம்பர் முதல் பகுதியில் மீண்டும் மதுபானங்கள் மீதான தீர்வை வரி உயர்த்தப்பட மற்றொரு காரணமாகியுள்ள அதே சமயம், பெறுமதிசேர் வரி விகித குறைப்பினாலும் சில்லறை விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாது தேச கட்டுமான வரி அகற்றப்பட்டமையாலும் ஏற்பட்ட வருமான இழப்பை ஈடு செய்வதற்காக மதுபான மற்றும் சிகரெட் மீதான வரிகள் அதிகரிக்கப்பட்டன.

**வரைபு 2.1.1 மதுபான உற்பத்தியும் மது வரியும்**




*Note: Liquor production in 2018 is in absolute amount*

*Source: Department of Fiscal Policy and Department of Excise*

**துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து முறையே 2019 யூன், 2019 செப்தெம்பர் மாதங்களில் பயன்வலுப் பெறுமாறு, இயைபுறு முறை அத்தியாயம் 85 மற்றும் 84 ஆகியவற்றின் பாதுகாப்பு சார்ந்த பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீதான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு வீத குறைப்புக்களுடன் இணைந்து 2019 ஆம் ஆண்டில் இறக்குமதி குறைப்பின் தாக்கத்தின் பிரதிபலிப்பாக, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்திலும் பெயரளவு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கமைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2018 ஆம் ஆண்டின் 0.8 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 0.7 சதவீதமாகவும், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் பெயரளவு நியதிகளில் 2018 ஆம் ஆண்டின் ரூபா 113.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 112.2 பில்லியன் வரை 1.6 சதவீதத்தினால் வீழச்சியடைந்துள்ளது. டீசல், பெற்றோல், சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய எண்ணெய், பால்மா மற்றும் திரவ பெற்றோலிய வாயு போன்ற இறக்குமதிகள், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு வருமானத்தில் பிரதான பங்களிப்பினை வழங்கியுள்ளன. வரி வருமானத்தில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டின் பங்கு 2018 ஆம் ஆண்டில் பதிவாகிய 6.7 சதவீதத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாக குறைவடைந்துள்ளது. நியம துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு விகிதம் 2019 திசெம்பர் மாதம் முதல் பயன்வலுப் பெறுமாறு 7.5 சதவீதத்தில் இருந்து 10.0 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டது.

**செஸ் அறவீடு**

செஸ் அறவீடு ஊடாக திரட்டப்பட்ட வருமானமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்திலும் பெயரளவு நியதிகளிலும் வீழ்ச்சியடைவதற்கு, இறக்குமதி தொடர்பான செயற்பாடுகளின் பின்னடைவும் தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதி மீது ஏற்புடைய செஸ் அறவீடு அவ்வப்போது நீக்கப்பட்டமையும் பிரதானமான காரணங்களாக அமைந்துள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக செஸ் வருமானம் முன்னைய ஆண்டின் 0.4 சதவீதத்தில் இருந்து மீளாய்வுக்குரிய ஆண்டில் 0.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் மீது திரட்டிய செஸ் வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 53.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 50.7 பில்லியனாக 5.0 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இறக்குமதிகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 50.8 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 48.4 பில்லியன் வரை 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு பீடி இலைகளின் இறக்குமதி மீது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 2,500 இலிருந்து கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 3,500 வரை, 2019 மாச்சு மாதம் முதல் பயன்வலுப் பெறுமாறு செஸ் அறவீடு அதிகரிக்கப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டின் மொத்த செஸ் வருமானத்தில் பீடி இலைகள் மூலமான செஸ் திரட்டல் பிரதான பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்கியுள்ளது. இதன் பிரகாரம், பீடி இலைகளால் அடையப் பெற்ற வருமானம் மொத்த திரட்டிய செஸ் வருமானத்தில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதியை பங்களிப்பு செய்தது. இறக்குமதிகள் மீதான செஸ் வருமானத்தில் பீங்கான் ஓடுகள், சீமெந்து, புடவை மற்றும் எண்ணெய்கள் போன்ற உற்பத்திகள் பிரதான பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்கியுள்ளன. ஏற்றுமதிகள் மீது ஏற்புடைய செஸ் அறவீட்டு வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 2.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் ரூபா 2.3 பில்லியன் வரை 11.3 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

**தொலைதொடர்பு அறவீடு**

இணையத்தள சேவைகள் தொடர்பான தொலைதொடர்பு அறவீடு நீக்கப்பட்டமையினாலும் 2018 நவம்பர் மாதம் குரல்வழி தொலைதொடர்பு மீதான தொலை தொடர்பு அறவீட்டு வீதம் 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் வரை குறைக்கப்பட்டமையினாலும் தொலைதொடர்புகள் அறவீடு ஊடாக திரட்டப்பட்ட வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 28.3 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 18.3 பில்லியன் வரை 35.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அத்துடன், 2019 திசெம்பர் மாதத்தில் குரல்வழி தொலைதொடர்பு மீதான தொலை தொடர்பு அறவீடு 15 சதவீதத்தில் இருந்து 11.25 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது. வரி நீக்கங்கள் மற்றும் தொடர்ச்சியான வரி விகித குறைப்புக்களின் ஒட்டுமொத்த தாக்கமும் தொலை தொடர்பு அறவீட்டின் வருமான பற்றாக்குறைக்கு இட்டுச் சென்றுள்ளது.

**2.1.2 வரி அல்லாத வருமானம்**

மத்திய வங்கியின் விநியோகிக்கத்தக்க இலாபங்களின் பதிவின்மை, அரசுடைமை வியாபார தொழில் முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்களின் வீழ்ச்சியுடன் இணைந்து கட்டணங்கள் மற்றும் அறவீடுகளினதும் வாடகை வருமானம் ஊடாக திரட்டப்பட்ட வருமானத்தினதும் சரிவு ஆகியவற்றின் காரணமாக வரி அல்லாத வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தி நியதிகளில்

போன்று பெயரளவு நியதிகளிலும் வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி அல்லாத வருமானம் 2018 ஆம் ஆண்டின் 1.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 1.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. பெயரளவு நியதிகளில், வரி அல்லாத வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 207.6 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 156.0 பில்லியன் வரை 24.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளது. மொத்த வருமானத்தில் வரி அல்லாத வருமானத்தின் பங்கு முன்னைய ஆண்டின் 10.8 சதவீதத்தில் இருந்து 8.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.

**வரி அல்லாத வருமானம்**

ரூபா.மில்

| விடயம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2018/2019 (% மாற்றம்) | 2019 (மொத்த வரியல்லாத வருமானம் %) |
|---|---|---|---|---|---|---|---|---|
| வட்டி / வாடகை | 13,647 | 7,321 | 15,806 | 11,845 | 13,731 | 18,547 | 35.1 | 11.9 |
| இலாபங்கள், பங்கிலாபங்கள் | 46,814 | 29,798 | 108,160 | 53,998 | 41,828 | 27,857 | -33.4 | 17.9 |
| விற்பனைகள், கட்டணங்கள் | 35,499 | 44,632 | 72,606 | 66,575 | 105,202 | 73,884 | -29.8 | 47.4 |
| சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு | 14,919 | 15,213 | 18,046 | 22,940 | 25,214 | 28,985 | 15.0 | 18.6 |
| மத்திய வங்கி இலாப மாற்றல்கள் | 11,500 | - | 5,000 | - | 15,000 | - | -100.0 | 0.0 |
| ஏனையவை | 22,466 | 2,135 | 2,754 | 5,995 | 6,681 | 6,701 | 0.3 | 4.3 |
| **மொத்தம்** | **144,845** | **99,099** | **222,372** | **161,353** | **207,656** | **155,974** | -24.9 | 100.0 |

*மூலம் : திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

பிரதான அரசுடைமை வியாபார முயற்சிகளின் மோசமான நிதிச் செயலாற்றுகையை பிரதிபலிக்கும் வகையில், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் மாற்றல்கள் 2018 ஆம் ஆண்டின் ரூபா 41.8 பில்லியனில் இருந்து, 2019 ஆம் ஆண்டில் ரூபா 27.8 பில்லியன் வரை 33.4 சதவீதத்தினால் சரிவடைந்துள்ளது. கட்டணங்கள் மற்றும் அறவீடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 105.2 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 73.9 பில்லியன் வரை 29.8 சதவீதத்தினால் கணிசமானளவு வீழ்ச்சியடைந்துள்ளது. அதே சமயம், வாடகை வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூபா 5.6 பில்லியனில் இருந்து 2019 ஆம் ஆண்டில் ரூபா 4.7 பில்லியன் வரை 15.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது

# பிரதான அரசிறை நடவடிக்கைகள்: சனவரி – ஏப்பிரல் 2020 ஏப்பிரல்

<table>
<tr><th>பயன்வலுப் பெறும் திகதி</th><th>நடவடிக்கைகள்</th></tr>
<tr><td colspan="2">வருமான வரி</td></tr>
<tr><td></td><td>தாபன வருமான வரி</td></tr>
<tr><td>01.01.2020</td><td>
<table>
<tr><th>பிரிவு</th><th>விகிதம்</th></tr>
<tr><td>நியம வருமான வரி வீதம்</td><td>24%</td></tr>
<tr><td>உற்பத்தித் துறை மீது ஏற்புடைய வருமான வரி வீதம்</td><td>18%</td></tr>
<tr><td>ஏற்றுமதிகள், சுற்றுலா, கல்வி, சுகாதாரம், நிர்மாணத்துறை மற்றும் வேளாண்மை-செயலாக்கம்</td><td>14%</td></tr>
<tr><td>பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் மற்றும் புகையிலை மீது ஏற்புடைய வருமான வரி விகிதம்</td><td>40%</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>தனியாள் வருமான வரி</td></tr>
<tr><td>01.01.2020</td><td>
<table>
<tr><th>வருடாந்த வரி அறவிடத்தகு வருமானம்</th><th>விகிதம்</th></tr>
<tr><td>முதல் 3,000,000</td><td>விலக்களிப்பு</td></tr>
<tr><td>3,000,000 – 6,000,000</td><td>6%</td></tr>
<tr><td>6,000,000 – 9,000,000</td><td>12%</td></tr>
<tr><td>9,000,000 மேற்படக்கூடிய</td><td>18%</td></tr>
</table>
</td></tr>
<tr><td>01.01.2020</td><td>முடிவுறுத்தல் நன்மைகள்</td></tr>
<tr><td></td><td>
<table>
<tr><th>முடிவுறுத்தல் நன்மைகளில் இருந்து அடையப்பெற்ற வருமானம்</th><th>சுயவந</th></tr>
<tr><td>முதல் 10,000,000</td><td>விலக்களிப்பு</td></tr>
<tr><td>அடுத்து வரும் 10,000,000</td><td>6%</td></tr>
<tr><td>மீதி</td><td>12%</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>உழைக்கும் போது செலுத்தும் வரி</td></tr>
<tr><td>01.01.2020</td><td>- எவரேனும் வதிவாளர் அல்லது வதிவாளர் அல்லாத ஒருவருக்கு ஊழியரின் ஒப்புதலுடன் ஏதேனும் ஊழிய வருமானம் மீது ஏற்புடைய உழைக்கும் போது செலுத்தும் வரியை நீக்குதல் மற்றும் வருமான மூலத்தில் குறைக்கக் கூடிய முற்பண தனியாள் வருமான வரியை அறிமுகப்படுத்துவதற்காக.</td></tr>
<tr><td></td><td></td></tr>
</table>

| | |
|---|---|
| | **பிடித்துவைத்தல் வரி** |
| 01.01.2020 | - பின்வருவன தவிர்ந்த எவரேனும் ஒரு வதிவாளருக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் மீது பிடித்து வைத்தல் வரியை நீக்குதல்<br>- சீட்டிழுப்பு (லொத்தர்), வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் வெற்றிகளூடாக பெறப்பட்ட தொகை மீது 14 சதவீதத்தில் பிடித்து வைத்தல் வரி.<br>- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் நடாத்தப்பட்ட ஏலவிற்பனை ஒன்றில் இரத்தினக்கல் ஒன்றின் விற்பனை மீது 2.5 சதவீத விகிதத்தில் பிடித்து வைத்தல் வரி.<br>- வதிவாளர் அல்லாத நபர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மீது பிடித்து வைத்தல் வரி. |
| | **வருமான வரி விலக்களிப்புக்கள்** |
| 01.01.2020 | தகவல் தொழிநுட்பம் மற்றும் சம்பந்தப்பட்ட சேவைகளிலிருந்து ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானம். |
| | வெளிநாட்டு மூலங்களால் ஈட்டப்பட்ட வருமானம் உட்பட இலங்கைக்கு வெளியே உள்ள நபர்களுக்கு வழங்கிய சேவைகள் ஊடாக பெற்றுக் கொண்ட இலாபங்கள் மற்றும் வருமானம், குறித்த சேவைகளுக்காக பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகள் வங்கி ஒன்றின் ஊடாக வெளிநாட்டு நாணயங்களில் பெறப்பட்டிருப்பின். |
| | வதிவாளர் அல்லாத ஒருவருக்கு வதிவிடக் கம்பனி ஒன்றினால் செலுத்தப்படும் பங்கிலாபங்கள். |
| | வர்த்தக மைய இயக்குநர்களால் விநியோகிக்கப்படும் பங்கிலாபங்கள். |
| | வதிவாளர் அல்லாத ஒருவரால் ஆய்வுகூடச் சேவைகள் அல்லது தராதர சான்றிதழ் சேவைகள் ஊடாக ஈட்டப்பட்ட தொகைகள். |
| | ஏதேனும் சமய நிறுவனங்களால் கொடைகள் மற்றும் அன்பளிப்புக்களாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள். |
| **பொருளாதார சேவைக் கட்டணம் - 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் சட்டம்** | |
| 01.01.2020 | - பொருளாதார சேவைக் கட்டணத்தை நீக்குவதற்காக. |
| **பெறுமதிசேர் வரி – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம்** | |
| 01.01.2020 | - பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்தலின் ஆரம்ப எல்லையை ஆண்டொன்றிற்கு ரூபா 12 மில்லியனில் இருந்து ரூபா 300 மில்லியன் வரை அதிகரிப்பதற்காக.<br>- தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியில் இருந்து விலக்களிப்பதற்காக. |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி** | |
| 06.03.2020 | 06.03.2020 ஆம் திகதிய 2165/60 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- 05.03.2019 ஆம் திகதிய 2113/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஐஐ அட்டவணையைத் திருத்தியமைப்பதற்காக. |

| | |
|---|---|
| | |
| **மது வரி (கட்டளைச் சட்ட) தீர்வை – மதுவரி கட்டளைச் சட்டம்** | |
| 01.03.2020 | 01/2020 இலக்க மதுவரி அறிவித்தல் (01.03.2020 ஆம் திகதிய 2164/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 04/2019 இலக்க மதுவரி அறிவித்தலின் விதிமுறைகளைத் திருத்தியமைப்பதற்காக. |
| 30.04.2020 | 02/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (30.04.2020 ஆம் திகதிய 2173/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- 988 இலக்க மதுவரி அறிவித்தலில் உள்ள அட்டவணையை திருத்தியமைப்பதற்காக. |
| **துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு – 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்** | |
| 25.02.2020 | 24.02.2020 ஆம் திகதிய 2164/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- கிளிங்கர் இறக்குமதிக்கு 7.5 சதவீத சலுகை வீதத்தை வழங்குவதற்காக. |
| 16.04.2020 | 16.04.2020 ஆம் திகதிய 2171/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்:<br>- துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டில் இருந்து பின்வருமாறு விலக்களிப்பு வழங்குவதற்காக:<br>செயலாளர், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சிற்கு நன்கொடையாக மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவமனை தளபாடங்களின் இறக்குமதிக்காக. |
| 23.04.2020 | 22.04.2020 ஆம் திகதிய 2171/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br>- உருக்கு கைத்தொழில் தொடர்பான மூலப் பொருட்களின் இறக்குமதிக்காக 5.0 சதவீத சலுகை வீதத்தை வழங்குவதற்காக. |
| **செஸ் அறவீடு – 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்** | |
| 14.01.2020 | 13.01.2020 ஆம் திகதிய 2158/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- கோதுமை மா இறக்குமதி மீதான செஸ் அறவீட்டினை நீக்குவதற்காக. |
| **சுங்க இறக்குமதி தீர்வை -1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 08.03.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் . 01/2020 (07.03.2020 ஆம் திகதிய 2165/72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- உழுந்து தொடர்பாக புதிய இயைபுறு முறைக் குறியீடு ஒன்றினை உருவாக்குவதற்காக. |
| 10.04.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் .02/2020 (09.04.2020 ஆம் திகதிய 2170⁚6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- மசகெண்ணெய்களின் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வையை திருத்தியமைப்பதற்காக. |
| 17.04.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் . 03⁚2020 (16.04.2020 ஆம் திகதிய 2174⁚4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வையை திருத்தியமைப்பதற்காக. |
| 23.04.2020 | அரசிறைப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் . 04⁚2020 (22.04.2020 ஆம் திகதிய 2172⁚6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)<br>- பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்க இறக்குமதி தீர்வையை திருத்துவதற்காக. |

| | |
|---|---|
| **சுங்கத் தீர்வை மீதான மேலதிக அறவீடு – சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** | |
| 14.03.2020 | 13.03.2020 ஆம் திகதிய 2166∕.35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். - பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைக்கு மேலதிக அறவீடு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக. |
| 23.04.2020 | 22.04.2020 ஆம் திகதிய 2172∕.07 ஆம் இலக்க வர்த்தமானி - அறிவித்தல்பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வைக்கான மேலதிக அறவீட்டை அதிகரிப்பதற்காக. |
| **சுங்க இறக்குமதி தீர்வை தளர்த்தீடு– சுங்க கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 232)** | |
| 14.01.2020 | - கோதுமை மா இறக்குமதி மீது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 13 சுங்கத் தீர்வை தள்ளுபடியினை அறிமுகப்படுத்துவதற்காக. |
| 14.03.2020 | - ஓட்டோ டீசல் இறக்குமதி மீது லீற்றர் ஒன்றிற்கு ரூபா 3 சுங்க இறக்கமதி தீர்வை தளர்வினை நீக்குவதற்காக<br>- பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 17 இலிருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 5 வரை சுங்கத் தீர்வை தளர்வினைக் குறைப்பதற்காக. |
| 23.04.2020 | - பெற்றோல் (ஒக்ரேன் 92) இறக்குமதி மீது லீற்றர் ஒன்றுக்கு ரூபா 5 சுங்கத் தீர்வை தளர்வினை நீக்குவதற்காக. |
| **விசேட வியாபாரப் பண்ட அறவீடு – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு சட்டம்** | |
| 25.01.2020 | 2020.01.24 ஆம் திகதிய 2159∕.41 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டின் பயன்வலுப்பெறும் காலத்தை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 02.02.2020 | 2020.02.01 ஆம் திகதிய 2160∕.63 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- பெரிய வெங்காயம், சிக் கடலைகள் (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை) சிவப்புப் பருப்பு (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை), மஞ்சள் பருப்பு (முழுமையானவை மற்றும் உடைக்கப்பட்டவை), பேரீச்சம்பழம், (புதிய மற்றும் உலர்ந்த) தோடம்பழம், (புதிய) அப்பிள் (புதிய) மக்காச் சோளம், மரக்கறி எண்ணெய், பீற் மற்றும் கரும்புச் சீனி, வெள்ளை பளிங்கு நிற கரும்புச் சீனி, வெள்ளை பளிங்குநிற பீற் சீனி என்பனவற்றிறின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 07.02.2020 | 2020.02.06 ஆம் திகதிய 2161∕.34 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- மீன் (புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை கிலோ கிறாமொன்றிற்கு ரூபா 25 இனால் மூன்று மாத காலப்பகுதிக்கு குறைப்பதற்காக. |
| 25.02.2020 | 2020.02.24 ஆம் திகதிய 2164∕.10 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை 31 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 04.03.2020 | 2020.03.03 ஆம் திகதிய 2165∕.12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- மீன் (புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட .அறவீட்டினை கி.கிறாமொன்றிற்கு 150 ரூபாவினால் ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிப்பதற்காக. |
| 08.03.2020 | 2020.03.07 ஆம் திகதிய 2165∕.73 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- மெக்கரல், உழுந்து, கௌபி மற்றும் குரக்கன் என்பனவற்றின் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டினை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 13.03.2020 | 2012.03.13 ஆம் திகதிய 2166∕.34 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br>- 2020.03.03 ஆம் திகதிய 2165∕.12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மீன் இரை இறக்குமதி தொடர்பிலான கட்டளையின் |

| | |
|---|---|
| | பின்னோக்கிய விளைவினை நீக்குவதற்காக. |
| 18.03.2020 | 2020.03.18 ஆம் திகதிய 2167∴10 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- 2020.03.03 ஆம் திகதிய 2165∴12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மீன் (புதிய, குளிரூட்டப்பட்ட அல்லது உறைய வைக்கப்பட்ட) இறக்குமதி தொடர்பிலான கட்டளையின் பின்னோக்கிய விளைவினை நீக்குவதற்காக. |
| 19.03.2020 | 2020.03.18 ஆம் திகதிய 2167∴11 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- தொற்றுநீக்கிகள் மற்றும் முகக் கவசங்கள் இறக்குமதி மீது கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 1 இனை விசேட வியாபாரப் பண்ட அறவீடாக இரண்டு மாத காலப்பகுதிக்கு வீதிப்பதற்காக. |
| 27.03.2020 | 2020.03.26 ஆம் திகதிய 2168∴7 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு நீடிப்பதற்காக. |
| 10.04.2020 | 2020.04.09 ஆம் திகதிய 2170∴5 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- மரக்கறி எண்ணெய்கள் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக திருத்தியமைப்பதற்காக. |
| 17.04.2020 | 2020.04.16 ஆம் திகதிய 2171∴2 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- தோடம்பழம்(புதிய), திராட்சைப் பழம்(புதிய, உலர்த்திய) மற்றும் அப்பில் இறக்குமதி மீதான விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டினை இரண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக திருத்தியமைப்பதற்காக. |
| 17.04.2020 | 2020.04.16 ஆம் திகதிய 2171∴3 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- மரக்கறி எண்ணெய்கள் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக விட்டுவிடுவதற்காக. |
| 01.05.2020 | 2020.04.30 ஆம் திகதிய 2173∴12 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- பெரிய வெங்காயம் இறக்குமதி மீதான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை மூன்று மாத காலப் பகுதிக்கு கிலோ கிறாமொன்றிற்கு 1 ரூபாவிலிருந்து கிலோ கிறாமொன்றிற்கு 15 ரூபா வரை அதிகரிப்பதற்காக. |
| **2018 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி** | |
| 20.02.2020 | 2020.02.20 ஆம் திகதிய 2163∴26 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல்<br><br>- 2019.10.31 ஆம் திகதிய 2147∴72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினைத் திருத்துவதற்காக. |
| | |
| **படுகடன் மீள்செலுத்தல் அறவீடு** | |
| 01.01.2020 | - படுகடன் மீள்செலுத்தல் அறவீட்டினை நீக்குவதற்காக. |
| | |
| **2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்** | |
| **தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் மீதான அறவீடு** | |
| 27.03.2020 | 2020.03.27 ஆம் திகதிய 2168∴9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் |

| | |
|---|---|
| | 2017.11.07 ஆம் திகதிய 2044/21 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலை திருத்துவதற்காக. |

**பிரதான அரசிறை நடவடிக்கைகள்: சனவரி – திசெம்பர் 2019**

| **பயன்வலுப் பெறும் திகதி** | **நடவடிக்கைகள்** |
|---|---|
| **பெறுமதிசேர் வரி – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம்** | |
| 21.05.2019 | 21.05.2019 ஆம் திகதிய 2124/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>ஹோட்டல், விருந்தினர் இல்லம், உணவகம் அல்லது அதற்குச் சமமான வியாபாரங்களின் சேவை வழங்கல் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவுசெய்துள்ள முகவர் நிறுவனம் ஒன்றின் உள்ளூர் சுற்றுலா சேவைகளின் வழங்கல் மீது ஒருவருட காலத்திற்கு 15 சதவீத்தில் இருந்து 5 சதவீதத்திற்கு குறைப்பதற்காக. |
| 01.06.2019 | 31.05.2019 ஆம் திகதிய 2125/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>ஹோட்டல், விருந்தினர் இல்லம், உணவகம் அல்லது அதற்குச் சமமான வியாபாரங்களின் சேவை வழங்கல் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவுசெய்துள்ள முகவர் நிறுவனம் ஒன்றின் உள்ளூர் சுற்றுலா சேவைகளின் வழங்கல் மீது 5 சதவீதத்தில் இருந்து 7 சதவீதம் வரை 2020 மாச்சு 31 ஆந் திகதி வரை அதிகரிப்பதற்காக. |
| 01.11.2019 | 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி(திருத்த) சட்டம்<br>- ஏற்றுமதி சார்ந்த தொழில் முயற்சிகளின் தெரிவு செய்யப்பட்ட சில ஆடை உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை மீது ஏற்புடைய கலப்பு பெறுமதி சேர் வரி வீதத்தை துண்டு ஒன்றிற்கு 75 ரூபாவில் இருந்து 100 ரூபா வரை அதிகரித்தல்<br>- உள்நாட்டில் உற்பத்தி செய்த அரிசி மூலம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தவிடு எண்ணெய்யின் வழங்கலுக்கு விலக்களிப்பதற்காக.<br>- நிர்மாணத்துறை ஒப்பந்தகாரர்களின் பொருட்கள் வழங்கலுக்கு அவர்களது கடல் கடந்த செயற்திட்டங்களை ஏற்றுமதிகளாக கணிப்பதற்காக.<br>- தொடர்மாடி வீட்டலகுகளின் வதிவிட குடியிருப்பு வழங்கல் மீது பெறுமதி சேர் வரியை 6 சதவீதத்தினால் குறைத்தலும் அத்தகைய வழங்கல் தொடர்பாக உள்ளீட்டு வரியை 5 சதவீதத்தில் கணிப்பீடு செய்வதற்காக.<br>-தொடர்மாடி வீட்டு அலகுகளின் விற்பனை மீது ஏற்புடைய விலக்களிப்பினை நீக்குவதற்காக. |
| 01.12.2019 | 29.11.2019 ஆம் திகதிய 2151/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br>- 01.12.2019 திகதி முதல் பயன்வலுப்பெறுமாறு ஏற்புடைய பெறுமதி சேர் வரி விகிதங்களை பின்வருமாறு நிர்ணயித்தல்<br>- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் பதிவுசெய்துள்ள ஹோட்டல், விருந்தினர் இல்லம், உணவகம் அல்லது அதற்குச் சமமான வியாபாரங்களினால் வழங்கப்படும் சமமான சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியில் இருந்து – உள்ளீடுகளின் மொத்தப் பெறுமதியில் அறுபது சதவீதத்திற்கு குறையாமல் உள்நாட்டு வழங்கல்கள்/மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் - 0%<br>- புடவைகளின் இறக்குமதி – 0%<br>- நிதிச் சேவைகளின் வழங்கல் - 15% |

| | |
|---|---|
| | - மேலே குறிப்பிட்டவை தவிர்ந்த பிற சேவைகளின் வழங்கல் மற்றும்/அல்லது இறக்குமதி பண்டங்களின் வழங்கல் மீது ஏற்புடைய நியம விகிதம் - 8% |
| 06.12.2019 | 05.12.2019 ஆம் திகதிய 2152/60 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>29.11.2019 ஆம் திகதிய 2151/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 1(அ) பந்தியின் விதிமுறைகளைத் தெளிவுபடுத்துவதற்காக. |
| **2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேச கட்டுமான வரிச் சட்டம்** | |
| 01.11.2019 | 2019 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க தேச கட்டுமான வரி (திருத்த) சட்டம்<br><br>- இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட்டுகளின் இறக்குமதி மற்றும் விற்பனை மீது வழங்கப்பட்ட தேச கட்டுமான வரி விலக்களிப்பினை நீக்குவதற்காக.<br>˙வெட்டல் மற்றும் பட்டை தீட்டலின் பின்னர் ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட தயார்படுத்தப் படாத மாணிக்கக் கற்களின் இறக்குமதிக்கு தேச கட்டுமான வரியிலிருந்து விலக்களித்தல் - இறக்குமதியாளர் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன் கொடுப்பனவுகள் வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டிருப்பின்.<br><br>- இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத பாம் எண்ணெய் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பாம் எண்ணெய்யிலிருந்து பாம் எண்ணெய் தயாரிக்கும் உள்நாட்டு பாம் எண்ணெய் உற்பத்தியாளர்களின் வருவாய்களுக்கு தேச கட்டுமான வரி விலக்களிப்பிற்காக.<br>- லுசர்ன் (அல்பல்பா) உணவு மற்றும் துகள்களின் இறக்குமதிக்கு தேச கட்டுமான வரி விலக்களிப்பிற்காக.<br>- களிப்பூட்டல் அல்லது விளையாட்டிற்கான படகுகள் அல்லது கலங்கள் மற்றும் துடுப்பினால் செலுத்தும் படகுகள் மற்றும் கன்வாஸ் ஆகியவற்றின் இறக்குமதிக்கு தேச கட்டுமான வரி விலக்களிப்பிற்காக.<br>- முதலீட்டு சபையுடன் உடன்படிக்கை செய்துள்ள தொழில்முயற்சி ஒன்றின் ஐ.அ.டொ. 50 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை முதலீடாகக் கொண்ட செயற்திட்டம் ஒன்றிற்காக செயல்திட்ட அமுல்படுத்தல் காலத்தில் அல்லது வர்த்தக தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட முன்னர் பொருட்கள் இறக்குமதிக்கு தேச கட்டுமான வரி விலக்களிப்பிற்காக.<br>- நிர்மாண ஒப்பந்தகாரர் அல்லது உப ஒப்பந்தகாரர் ஒருவரின் நிர்மாணத்துறை சார்ந்த ஏதேனும் கட்டடம், வீதி, பாலம், நீர் வழங்கல், வடிகாலமைப்பு அல்லது கழிவுநீர் முறைமை, துறைமுகம், விமான நிலையம் அல்லது தொலை தொடர்பு அல்லது மின்சார உட்கட்டமைப்பு சேவைகளுக்கு தேச கட்டுமான வரி விலக்களிப்பு வழங்குவதற்காக.<br>-இலங்கை சுற்றுலா அதிகார சபையுடன் பதிவுசெய்துள்ள உல்லாச ஹோட்டல்கள், விருந்தினர் இல்லங்கள், உணவகங்கள் அல்லது அதற்குச் சமமான வியாபாரங்களால் பெற்றுக் கொள்ளப்படும் வெளிநாட்டு நாணய பெறுகைகளுக்கு தேச கட்டுமான வரி விலக்களிப்பு வழங்குவதற்காக. |
| 01.12.2019 | - தேச கட்டுமான வரியை நீக்குவதற்காக. |
| **உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி** | |
| 11.01.2019 | 11.01.2019 ஆம் திகதிய 2105/48 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>அரசாங்க சேவை அனுமதிப் பத்திர திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டதும் 2018 யூன் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நாணயக் கடிதம் திறக்கப்பட்டதுமான வாகனங்களுக்கு சுங்க விடுவிப்பு காலத்தை நீடிப்பதற்காக. |
| 06.03.2019 | 05.03.2019 ஆம் திகதிய 2113/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் |

- சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியை பின்வருமாறு அதிகரித்தல்:

| வகை | நடைமுறையில் இருந்த வரி (தலா 1,000 கூறுகளுக்கு ரூ.) | வரி திருத்தம் (தலா 1,000 கூறுகளுக்கு ரூ.) |
|---|---|---|
| <60 மிமீ | 11,675 | - |
| 60 - 67 மிமீ | 17,375 | 19,500 |
| 67 - 72 மிமீ | 20,500 | 23,000 |
| 72 - 84 மிமீ | 33,550 | 37,580 |
| >84 மிமீ | 37,675 | 42,200 |

- தெரிவு செய்யப்பட்ட சில பொருட்கள் மீது உற்பத்தி வரியை பின்வருமாறு திருத்துதல்:

| பண்டங்கள் | நடைமுறையில் இருந்த வரி | வரி திருத்தம் |
|---|---|---|
| சுவையூட்டப்பட்ட குடிபானங்கள் | விலக்களிக்கப்பட்ட அளவிற்கு மேற்படும் சீனி ஒரு லீற்றருக்கு ரூ.12 அல்லது ஒரு கிராமிற்கு 30 சதம் | விலக்களிக்கப்பட்ட அளவிற்கு மேற்படும் சீனி ஒரு லீற்றருக்கு ரூ.12 அல்லது ஒரு கிராமிற்கு 40 சதம் |
| பாம் எண்ணெய் கொழுப்பமிலங்கள் | 25 சதவீதம் | 20 சதவீதம் |
| கொழுப்பமிலங்கள் | 25 சதவீதம் | 20 சதவீதம் |
| குளிர்சாதனப் பெட்டிகள் | 17 சதவீதம் | 25 சதவீதம் |
| செஸி பொருத்தப்பட்ட இயந்திரங்களாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் | அலகு ஒன்றிற்கு ரூ. 700,000 | அலகு ஒன்றிற்கு ரூ. 500,000 |

- இயந்திரக் கொள்ளளவு 2,000 க.செ இற்கு குறைவான இயந்திர கொள்ளளவை உடைய மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரியை அதிகரிப்பதற்காக.
- ஹியர்ஸ், ஹைப்ரிட் மற்றும் மின்சாரத்தினால் இயங்கும் வான்கள் ஒற்றை கப் வண்டிகள் மீதான உற்பத்தி வரியைக் குறைப்பதற்காக.
- 2,000 கி.கிராமிற்கு குறைவான சரக்கு ஏற்றல் கொள்ளளவை உடைய படி டிரக் வண்டிகள் மீதான உற்பத்தி வரியைக் குறைப்பதற்காக..

| | |
|---|---|
| 13.03.2019 | 13.03.2019 ஆம் திகதிய 2114/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>05.03.2019 ஆம் திகதிய 2113/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் |

<table>
<tr><td></td><td>பின்னோக்கிய விளைவை அகற்றுவதற்காக.</td></tr>
<tr><td>15.03.2019</td><td>14.03.2019 ஆம் திகதிய 2114/49 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்கள் மீதான உற்பத்தி வரியைக் குறைப்பதற்காக .</td></tr>
<tr><td>05.04.2019</td><td>04.04.2019 ஆம் திகதிய 2117/48 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>2015 – 2017 காலப் பகுதியில் மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தி வரி திருத்தத்தின் காரணமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனங்களை விடுவிப்பதற்காக உற்பத்தி வரிச் சலுகையளிப்பதற்காக.</td></tr>
<tr><td>14.05.2019</td><td>13.05.2019 ஆம் திகதிய 2123/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>- 72 மி.மீற்றருக்கு மேற்பட்ட எனினும் 84 மி.மீற்றருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்ட சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியை 1,000 கூறுகளுக்கு 36,580 ரூபாவில் இருந்து 1,000 கூறுகளுக்கு 37,600 ரூபா வரை அதிகரிப்பதற்காக.</td></tr>
<tr><td>11.07.2019</td><td>10.07.2019 ஆம் திகதிய 2131/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்.<br><br>- 67 மி.மீற்றருக்கு மேற்பட்ட எனினும் 72 மி.மீற்றருக்கு மேற்படாத நீளத்தைக் கொண்ட சிகரெட்டுகள் மீதான உற்பத்தி வரியை 1,000 கூறுகளுக்கு 23,000 ரூபாவில் இருந்து 1,000 கூறுகளுக்கு 37,6000 ரூபா வரை அதிகரிப்பதற்காக.</td></tr>
